08.02.2023. சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை . (ஓ.எஸ்.எண்.212/2017 ) வா.சா.1. எத்திராஜ்.

குறுக்கு விசாரணை –

1) தாவாச்சொத்திற்கு கிழக்கே மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைதள நீர்த்தேக்கத்தொட்டி, நீர்ஏற்றும் நிலையம் ஆகியவை சர்வே எண்.147/9ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.147/9ன் மொத்த விஸ்தீரணம் 50 செண்ட் என்றால் சரிதான். ஷை நிலம் ராமசாமி நாயக்கர் மனைவி அய்யம்மாள் என்பவரால் அரசுக்கு நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்காக தானமாக 29.07.2004ம் தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். திருவேங்கடம் – கோவில்பட்டி மெயின் ரோடுக்கும் ஷை நீர்த்தேக்க தொட்டிக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் பிரதான சாலையிலிருந்து கிழக்கு பக்கம் 150 மீட்டர் துாரம் இருக்கும். இராமசாமி நாயக்கர் மனைவி அய்யம்மாளுக்கு தானமாக கொடுத்த 50 செண்டு நிலம் போக அந்த இடத்தில் வேறு நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். ஷை இடங்களுக்கு போவதற்கு திருவேங்கடம் – கோவில்பட்டி பிரதான சாலையிலிருந்து 12 அடி அகலத்தில் மண் பாதை அமைந்துள்ளது என்றால் சரியல்ல. அந்த பாதை பொது பாதை இல்லை டிரேக்டர் செல்லும் தனிப்பாதை, ஷை பாதையில் மேற்கில் அமைந்துள்ள பகுதி எனக்குப் பாத்தியப்பட்டது அதனை தொடர்ந்து அந்த பாதையின் கிழக்கில் அமைந்துள்ள பகுதி அய்யம்மாளுக்குப் பாத்தியப்பட்டது.

2) அந்த பாதை தென்வடலாக 12அடி அகலத்திலும், கிழமேலாக 147அடி நீளத்திலும் அமைந்துள்ள பாதை என்றாலும், எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது இல்லையென்றாலும் சரியல்ல. ஷை பாதையில் தென்பக்கம் 6 அடி அகலமும், 147 அடி நீளமுள்ள இடத்தை பாதைக்காக ஷை இடத்தின் உரிமையாளரான பெருமாள் நாயக்கர் மனைவி கணபதியம்மாளிடமிருந்து இராமசாமி நாயக்கர் மனைவி அய்யம்மாள் 29.07.2004ல் ஆவண எண்.3869/2004 மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. ஷை பாதையில் வடக்கு பக்கம் உள்ள 6 அடி அகலம் 147 நீளமுள்ள நிலம் கணபதியம்மாள் அவருடைய பங்களிப்பாக பாதைக்கு விட்டு ஷை இடத்தில் 12 அடி அகலத்தில் 147 நீளத்தில் பாதை அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த தேதியிலிருந்து கணபதியம்மாளும், அய்யம்மாளும் கிழக்கு பக்கம் உள்ள அவர்களது நிலத்திற்கு செல்வதற்கு ஷை 12 அடி அகலப்பாதையை பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீர்த்தேக்க தொட்டி

கட்டுவதற்கு அரசுக்கு 50 செண்ட் நிலம் தானமாக கொடுத்த அதே தேதியில் அய்யம்மாள் பாதைக்காக 6 அடி அகல நிலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அய்யம்மாள் கிரையம் பெற்றது தவறானது.

3) வழக்கு தபசிலுக்கு தென்பக்கம் சீனியம்மாள் வகையறாவின் நிலம் உள்ளது என்றால் சரிதான். ஷை சீனியம்மாள் நிலத்திற்கு தெற்கே நான் கிரையம் பெற்ற 4 செண்டு நிலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த 4 செண்டு நிலத்திற்கு தெற்கே நான் குடியிருக்கும் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். அய்யம்மாள் கிரையம் பெற்ற ஆவண எண்.3869/2004 என்ற ஆவணம் செல்லாது என விளம்புகை செய்ய வேண்டி அசல் வழக்கு எண்.176/2016 என்ற வழக்கு சமூகம் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் கிரையம் பெற்றுள்ள 4 செண்டு நிலத்தை பொறுத்து மட்டும் ஷை ஆவணம் செல்லாது என பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். ஷை நான் கிரையம் பெற்ற 4 செண்டு நிலத்தில் பாதை எதுவும் இல்லை என்றால் சரிதான். அந்த 4 செண்டு நிலத்தில் குழாய் எதுவும் பதிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஷை நீர்த்தேக்க தொட்டியில் ' மானூர் மற்றும் நானூர் கூட்டு குடிநீர்த்திட்டம் மதிப்பீடு 78.70 லட்டம் என்றும் வழியோர கிராமங்களுக்கான நீர்ஏற்றும் நிலையம் நக்கலமுத்தன்பட்டி 2005–2006' என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்துள்ள அறிக்கையில் ஷை விவரத்தை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 2006 ஆம் ஆண்டு ஷை நீர்த்தேக்க தொட்டி கட்டி முடிக்கப்பட்டு 2007 ஆம்ஆண்டு தாவா பைப் லைன் பதிக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான், ஷை நீர்த்தேக்க தொட்டிக்கு பைப் லையன் அய்யம்மாள் பாதைக்காக கிரையம் பெற்ற இடத்தில் பதித்திருக்க வேண்டும் ஆனால் தவறுதலாக நான் கிரையம் பெற்ற இடத்தில் பதித்து விட்டார்கள், அந்த விவரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தண்ணீர் குழாயில் பழுது ஏற்பட்டு சரி செய்ய குழி தோண்டிய போது தான் எனக்குத்தெரியவந்தது. வழக்கு சொத்தை நான் 2007 ல் கிரையம் பெறவில்லை என்றாலும் 2015 ல் தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்குப்படி தாவாப்படும் பாதை எங்கு அமைந்துள்ளது என்றால் நான் முதலில் கிரையம் பெற்ற 4 செண்டு நிலத்தில் அமைந்துள்ளது.

5) அவ்வாறு நான் கிரையம் பெற்ற 4 செண்டு நிலத்தில் பாதை அமைந்துள்ளதாக நான் தாக்கல் செய்த முன் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிலும் பாதை நான் கிரையம் பெற்றுள்ள 4 செண்டு நிலத்தில் அமைந்துள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2009 ல் தற்போது அமைந்துள்ள பாதையை பஞ்சாயத்திலிருந்து சீர் செய்து சாலை அமைக்க நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரிதான். ஷை சாலை அமைக்கக்கூடாதென நான் ஆட்சேபனை தெரிவித்து இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.164/2009 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவாச்சொத்தில் 12 அடி அகலமும், 147 அடி நீளமுள்ள உள்ள பாதை செல்கிறது என்பதையும் தண்ணீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிந்து 2015 ல் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

6) நான் கிரையம் பெற்ற வா.சா.ஆ.1 கிரையம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பொதுமக்களுக்கு கிடைக்கவேண்டிய நன்மையை கெடுப்பதற்காக பொய்யான பத்திரத்தை பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கில் 21.03.2017 ல் குழாய் பதிக்க வந்ததாக நான் உண்மைக்கு புறம்பாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 29.07.2004 ல் 50 செண்ட் நிலம் அரசால் தானமாக பெறப்பட்டு அதில் நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டு ஷை திட்டம் நடைமுறைக்கு வந்து 28 கிராமங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது என்றால் சரிதான், கொண்டு போகும் வழித்தடம் தான் தவறு என்று நான் கூறுகிறேன். ஷை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லும் குழாய்கள் சர்வே எண்.159/1 ல் அய்யம்மாள் பாதைக்காக கிரையம் பெற்ற நிலத்தில் பதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஷை தண்ணீர் குழாய் பதித்து 12 வருடங்கள் கழிந்த பின்பு பொதுமக்களை இடையூறு செய்வதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) இந்த வழக்கில் தாவாச்சொத்து எனக்கு உரிமையாளது என விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். விளம்புகை பரிகாரம் கோராமல் தண்ணீர் குழாயை அகற்ற வேண்டுமென்று கோரியுள்ள செயல்உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மோசடியானது என்றாலும் அதன் அடிப்படையில் வா.சா.ஆ.2 ஆவணம்

செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கூட்டுப்பட்டாவில் எனக்கு எவ்வளவு நிலம் உரிமையானது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)வே.முரளிதரன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
08.02.2023.